**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.181/22 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.10 |
| பெயர் | ரமேஷ் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | பழனிசாமி | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.K.Arumugam, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 24.02.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிசெய்து வருகேின். 16.02.2021 தேதியில் திருக்கோகர்ண காவல் ஆய்வாளராக பணியில் புரிந்தபோது அன்றைய தினம் நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் முருகானந்தம் கம்மாளர் நேரு தெருவில் இருந்த முத்துக்குமார் என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.648/2021 இதச பிரிவு 436ன் படி வழக்கு அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அவர் பதிவு செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.7. வழக்கின் மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். அதை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மலர்க்கொடி, சுகன்யா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.8. மாதிரிவரைபடம் அ.சா.ஆ.9. அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த உடைந்த நிலையில் உள்ள திரியுடன் கூடிய பீர்பாட்டில் ஒன்று, எரிந்த நிலையில் ரோஸ் மற்றும் மெரூன் கலர் ஸ்கிரின் துணி ஒன்றையும் மகஜர்தயார் செய்து

கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.சா.ஆ.10. திரியுடன் கூடிய உடைந்த பீர்பாட்டில் சா.பொ.1. எரிந்த நிலையில் உள்ள ரோஸ் மற்றும் மெரூன் கலர் ஸ்கிரின் துணி சா.பொ.2. சாட்சிகள் முத்துக்குமார், வீரமுத்து, ஆனந்த், தர்மராஜ், மலர்க்கொடி, சுகன்யா மற்றும் தடயவியல் நிபுணர் திரு.அருணகிரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் விசாரணையில் குற்ற செயலில் ஈடுபட்டது விஜய் என்கிற கோழி விஜய், மணி என்கிற சின்னமணி மற்றும் கருப்பசாமி ஆகிய மூவரும் என்று தெரியவந்தது. எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.08.2021 தேதியில் 16.00 மணிக்கு எதிரி கோழிவிஜய் வீடுதாமரை கிரஷ்ஷர் அருகில் நிலைய குற்ற எண்.646/2021 வழக்கில் கைது செய்து சாட்சிகள் சின்னதம்பி, தயாளன் முன்னிலையில் எதிரி கோழிவிஜய் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை தானும் தனது நண்பர்களான மணி, கருப்பசாமி ஆகியோருடன் மணி என்பவர் இரு சக்கர வாகனமான TN 48 L6137 Hero Honda Splender வாகனத்தை ஓட்டியதாகவும் அதில் தான் முதலில் அமர்ந்ததாகவும், தனக்கு பின்னால் கருப்பசாமி அமர்ந்திருந்ததாகவும், வாதி வீட்டின் அருகே சென்றவுடன் கருப்பசாமி தன் கையில் வைத்திருந்த தனது வண்டியில் இருந்து பிடித்து நிரப்பிய பெட்ரோலுடன் கூடிய பீர்பாட்டிலில் திரியில் தீ வைத்து 1வது எதிரி விஜய் வாதி வீட்டின் முன்பு எரிந்ததாகவும் கூறினார். எதிரி விஜய் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. அநத் ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள இரு சக்கர வாகனம் மற்றும் திரி தயாரிக்க பயன்படுத்திய மீதமுள்ள துணியானது வேறு ஒரு வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதால் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேலும் 3வது எதிரி கருப்பசாமி என்பவரை 17.08.2021 தேதியில் மாலை 4.00 மணிக்கு நிலைய குற்ற எண்.651/2021 வழக்கில் பிரகதாம்பாள் கோவில் குளத்தின் அருகில் கைது செய்தபோது சாட்சிகள் சண்முகம், துரை ஆகியோர் முன்பு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 19.08.2021 தேதியில் காலை 7.00 மணிக்கு புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேசன் அருகில் மணி என்கிற சின்னமணியை சாட்சிகள் சீனிவாசன், அருண் ஆகியோர் முன்னிலையில் கைது

செய்தேன். எதிரி மணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்கண்ட எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றிய தடயக்ளை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். சாட்சிகள் தயாளன், சின்னதம்பி, சண்முகம், துரை, சீனிவாசன் , அருண், சிறப்பு உதவி ஆய்வாளர் முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 436ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதி 15.08.2021 நேரம் அதிகாலை 2.45 மணி என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்திற்கு 16.08.2021 தேதியில் காலை 7.00 மணிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உறவினர்களிடம் கலந்து ஆலோசித்துவிட்டு புகார் கொடுக்க காலதாமதமாகிவிட்டதாக புகார்தாரர் கூறினார். புகார்தாரருக்கு புகார் கொடுக்கும் சமயத்தில் எதிரிகளின் பெயர் தெரியாது என்று சொன்னால் சரிதான். பிறகு நேரில் பார்த்த சாட்சிகளிடம் விசாரித்து அறிந்துவிட்டு புகார்தாரரை நான் 11 மணிக்கு மேல் விசாரித்தபோது எதிரிகளின் பெயரை கூறினார். அ.சா.1, அ.சா.5 மற்றும் அ.சா.6 வரையிலான சாட்சிகளுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாகவோ, அது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாகவோ காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் சாட்சிகள் ஆனந்த், வீரமுத்து, ஆகியோர் அ.சா1னின் உறவினரா என்று கேட்டால் வீரமுத்து மட்டும் அ.சா.1னின் உறவினர் ஆவார். சம்பவம் நடந்த இடத்தில் மின்விளக்குகள் இருப்பது குறித்து நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். நேரில் பார்த்த சாட்சிகள் எதிரிகள் பற்றி கூறிவிட்டதால் எதிரிகளை அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. 1 முதல் 3 எதிரிகளுக்குள் ஒருவருக்கொருவர் வழக்கு சம்பவம் சம்மந்தமாக தொடர்பில் இருந்தது குறித்து நான் அவர்களுடைய செல்போன் எதையும் கைப்பற்றவில்லை. வாதியின் தகப்பனார் கருப்பையா என்பவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக

சேர்க்கவில்லை. எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லும்இரு சக்கர வாகனத்தின் அடையாளம் குறித்து நான் விசாரிக்கவில்லை. நான் தயார் செய்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் மின்விளக்குகள் இருந்ததாக குறிப்பிடவில்லை. தடயவியல் நிபுணர் எனது விசாரணையின்போது சம்பவ இடத்தில் உடைந்த பீர்பாட்டில் கிடந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் எதிரிகளிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னாலும் அவர்களிடம் இருந்து சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் அ.சா.1டம் வெற்று பேப்பரில் கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டு எதிரிகள் மீது புள்ளிவிபர கணக்கிற்காக பொய் விபரம் போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ரமேஷ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.